# அணைகள் பாதுகாப்பு குறித்த தேசிய கருத்தரங்கம்

## மத்திய நீர்வள ஆணைய தலைவர் பங்கேற்பு

**சென்னை, மார்ச் 21:** முதன் முறையாக அணைகள் பாதுகாப்பு குறித்து தேசிய அளவில் நடக்கும் கருத்தரங்கில் மத்திய நீர்வள ஆணைய தலைவர் பாண்டியா பங்கேற்கிறார்.

மத்திய நீர்வள ஆணையம், தமிழக பொதுப்பணித்துறை மற்றும் ஐஐடி இணைந்து முதன்முறையாக தேசிய அளவிலான அணைகள் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கம் வரும் 24, 25ம் தேதி ஐஐடி வளாகத்தில் நடக்கிறது.

இதில், அணைகள் பாதுகாப்பு இயக்கக தலைமை பொறியாளர் ஜான் பிரிட்டோ வரவேற்கிறார். அணைகள் பாதுகாப்பு திட்ட இயக்குனர் பிள்ளை தலைமை வகிக்கிறார். தமிழக மின்சார வாரிய தலைவர் சாய்க்குமார் முன்னிலை வகிக்கிறார்.

மத்திய நீர்வள ஆணைய தலைவர் பாண்டியா சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். மாநில திட்ட மேலாண்மை இயக்குனர் சுரேஷ் நன்றி கூறுகிறார்.

2 நாள் நடக்கும் கருத்தரங்கில் அணைகள் பாதுகாப்பு குறித்து விவாதிக்கப்படுகிறது. தமிழகம் உட்பட வெளி மாநிலங்களில் இருந்து நீர்வளத்துறையை சேர்ந்த பொறியாளர்கள் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.

தினகரன் 21/3/15

Dhinakaran

Date: 21.03.2015

Dhinakaran one of the leading Tamil daily, dated 21.03.2015 issues a news about, conducting the First National Dam Safety Conference.

Chennai, March-21, For the First time, the National Dam Safety Conference has been proposed to be convene and the Chairman, Central Water Commission, Shri.Pandya will participate.

The First National Dam Safety Conference proposed to be convene by the Central Water Commission along with the Tamil Nadu Public Works Department in coordination with the IIT, Madras on 24$^{th}$ & 25$^{th}$ of March 2015 at the premises of IIT, Madras.

In that Conference the Chief Engineer, WRD, O&M, Shri.John Britto delivers the Welcome address and the Project Director, Central Water Commission, Dr.Pillai to be chair over the Conference and the Chairman, TANGEDCO Shri. Sai Kumar gives his presidential address. The Chairman, CWC Shri. Pandya will be as a special Guest & the Project Director, TNSPMU Shri. Suresh gives Vote of Thanks.

In the two day conference it is proposed to discuss about the safety of dams. Large number of Engineers from Water Resources Department of Tamil Nadu and from the other states is also going to be participating.